| O.S.No. 310/2022 | PW2: திரு. வேதாச்சலம்<br>த/பெ. திரு. பலராம கவுண்டர் | 13-03-2026 |
|---|---|---|

**சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1. நான் தவசி கிராமத்தில் வசிக்கிறேன். வாதி என் உறவினர். வாதியும் தவசி கிராமத்தில் வசிக்கிறார். வீராசாமிக்கு புளியாத்தம்மன் (எ) வேளாளர் தெருவில் உள்ள கூரை வீடு மற்றும் காலி மனையின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. வாதிக்கும் பிரதிவாதிகளுக்கும் பிரச்சனைக்குரிய சொத்தானது களத்துமேட்டுத்தெருவில் உள்ளது. அந்த சொத்தின் சர்வே எண் தெரியாது. எந்த ஆண்டு பஞ்சாயத்து நடந்தது என்றால் 2 ஆண்டிற்கு முன்னர் நடந்தது. அந்த பஞ்சாயத்தில் நான் கலந்துகொண்டேன். நான் ஊரில் தலைவராக இல்லை. அந்த பஞ்சாயத்தை வாதி வீராசாமி கூட்டினார். பஞ்சாயத்தில் என்ன பேசி முடிவு எடுக்கப்பட்டது என்பது ஆவணமாக எழுதப்பட்டதா என்றால் இல்லை. அந்த பஞ்சாயத்தில் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. அந்த பஞ்சாயத்தில் இரு தரப்பினரும் சொத்து தங்களுக்கு உரிமையானது என்று சொன்னதால் எந்த முடிவும் எடுக்கப்படவில்லை.

2. சொத்தின் அமைவிடம் எனக்கு நன்கு தெரியும். வாதி வீராசாமிக்கு வேளாளர் தெருவிற்கு கிழக்கே தெருவிற்கு ஒட்டினார்போல் சொந்தமாக மெத்தை வீடு உள்ளது. அந்த வீட்டிற்கு கீழண்டை பக்கம் அண்ணாமலையின் வீடு உள்ளது. அண்ணாமலை வீட்டிற்கு கிழக்கே நடராஜனின் மெத்தை வீடு உள்ளது. அதற்கும் கிழக்கே வீராசாமியின் காலிமனை உள்ளது. அந்த காலி மனைக்கு பக்கத்திலேயே வீரசாமியின் மற்றொரு காலி மனை உள்ளது. அதற்கும் கிழக்கே நாராயணசாமியின் மகன் மாதவன் வீடு உள்ளது.

3. மேற்படியார்களின் வீட்டிற்கு வடக்கே வடவண்டை பக்கம் பொது வழி உள்ளது. அந்த பொதுவழிக்கும் வடவண்டை பக்கம்தான் நடராஜ கவுண்டரின் வீடு உள்ளது என்றால் சரிதான். நடராஜ கவுண்டரின் வீட்டிற்கு கீழண்டை பக்கம்தான் தற்போது பிரச்சனைக்குரிய சொத்தானது உள்ளது. அந்த இடத்தில்தான் தற்போது பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ளார்கள். பிரதிவாதிகள் வீடு கட்டியுள்ள வீட்டிற்கு கீழண்டை பக்கம் நடராஜனின் மாட்டு கொட்டகை உள்ளது. நடராஜனின் மாட்டுக்கொட்டகைக்கும் கீழண்டை பக்கம் நாராயணனின் மொத்தை வீடு உள்ளது. அதற்கும் கிழக்கே நடேசன் மற்றும் இராமலிங்கத்தின் வீடு உள்ளது. பிரதிவாதிகள் வீடு கட்டி வரும் இடமானது ஏற்கனவே அவர்களுடைய பாட்டனார் கோவிந்த கவுண்டர், சின்னப்பா கவுண்டர் ஆகியோர்களுக்கு சொந்தமான இடம் என்று சொன்னால் சரிதான், ஆனால் நடுவில் வழி உள்ளது.

4. கிராம வரைபடத்தை நான் பார்க்கவில்லை. மேற்படியார்கள் வீடு கட்டி அனுபவித்து வரும் இடத்திற்கு உட்பிரிவு செய்யப்பட்டு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி வீராசாமியின் சொத்திற்கு போக வேளாளர் தெருவிலிருந்து சர்வே எண். 298/36 வழியாகத்தான் செல்ல வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்திற்கு பக்கத்தில் வழி எப்போது இருந்ததில்லை என்று சொன்னால் சரியல்ல, வழி உள்ளது. மேற்படி வழி வீராசாமி அவரது சொத்திற்கு போவதற்காக கிரையம் வாங்கியதா என்றால் அது எனக்கு தெரியாது, ஆனால் எனக்கு தெரிந்த வகையில் அந்த வழியாகத்தான் போய் வந்துகொண்டிருந்தார்கள். அவ்வாறு வழி இருந்திருந்தால் வருவாய்த்துறை ஆவணங்களில் வழிக்கு உட்பிரிவு

செய்திருப்பார்கள் என்றாலும், நான் சொல்வதுபோல் எந்தவொரு வழியும் இல்லை என்றாலும் சரியல்ல.

5. காவல் நிலையம் உடன் சென்றதாக வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்தில் வழி இல்லை என்றாலும், வாதி என் உறவினர் என்பதால் வாதிக்கு பவ்வியப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** : இல்லை.

ஒம்/- வேதாச்சலம்

சாட்சியின் கையொப்பம்

என்னால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு, அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

M VIGNESH PRABU

Digitally signed by M VIGNESH PRABU
Date: 2026.03.13 11:44:14 +0530

**கூடுதல் சார்பு நீதிபதி,**
**செய்யாறு.**